# மகிழினி 12

## தமிழ்த் துணைவன்

**புதிய பாடத்திட்டத்தின்படி**


மெல்லக் கற்போர் முதல் மீத்திறன் மாணவர்களுக்காக
சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு சிறந்த முறையில்
உருவாக்கப்பட்ட வினா - விடை

மெல்லக் கற்போருக்கான இலவச வினா - விடை

வெற்றி நிச்சயம்

100
100

இதுவே சாத்தியம்



www.Padasalai.net

# மகிழினி

## தமிழ்த் துணைவன்

# 12

## 2023 - 2024

புதிய பாடத்திட்டத்தின்படி

மெல்லக் கற்போர் முதல் மீத்திறன் மாணவர்களுக்காகச் சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு சிறந்த முறையில் உருவாக்கப்பட்ட வினா-விடை

(செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம், மொழிப்பயிற்சி)

அலைபேசி :

9842730878, 9751679727, 9842439647

இரா.இராஜதுரை

எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில். பிஎச்.டி. டிபிடி,

முதுகலைத் தமிழ் ஆசிரியர்

www.Padasalai.Net

# நன்றி மறவேன்

1. நல்லாசிரியர் சி. துரைமாணிக்கம், தமிழாசிரியர்
   பிருந்தாவன் மேல்நிலைப்பள்ளி- பட்டுக்கோட்டை
2. கோவி.இராஜேந்திரன், உதவி தலைமையாசிரியர்
   லாரல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி - பட்டுக்கோட்டை
3. பி.பாஸ்கரன், தமிழாசிரியர்
   வேலம்மாள் நிறைநிலை மேல்நிலைப்பள்ளி - சென்னை
4. முனைவர் இராஜவினோதா, உதவிப்பேராசிரியர்
   அரசு கலைக்கல்லூரி பேராவூரணி
5. பொ.சேகர், உதவிப்பேராசிரியர்
   ஏனாதி இராஜப்பா கலை அறிவியல் கல்லூரி - ஏனாதி
6. க.கணேஷ்பாபு, தமிழாசிரியர்
   லிட்டில்ஸ்காலர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி - தஞ்சாவூர்
7. ந. சோமசுந்தரம், தமிழாசிரியர்
   வேளாங்கண்ணி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி சென்னை
8. மா.இரமேஷ்குமார், தமிழாசிரியர்
   பிருந்தாவன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி-பட்டுக்கோட்டை

**புத்தகம் முழுமைப்பெற உதவிய அனைத்து ஆசிரிய பெருமக்களுக்கும் நன்றி**

**எனது வங்கி கணக்கு எண் :**

| | | |
|---|---|---|
| Bank | : | State Bank of India |
| A/c. Name | : | R. RAJADURAI |
| A/c. No. | : | 32529679595 |
| IFSC Code | : | SBIN0000896 |
| A/c. Branch | : | THALAIYARI STREET, PATTUKOTTAI |
| Phone | : | 9842730878 |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# தமிழ் இலக்கியங்களில் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படைச் செய்திகள்

சங்க இலக்கியங்கள்

எட்டுத்தொகை

| அகம் | புறம் | அகமும் புறமும் |
|---|---|---|
| நற்றிணை | புறநானூறு | பரிபாடல் |
| குறுந்தொகை | பதிற்றுப்பத்து | |
| ஐங்குறுநூறு | | |
| அகநானூறு | | |
| கலித்தொகை | | |

பத்துப்பாட்டு

| அகம் | புறம் |
|---|---|
| குறிஞ்சிப்பாட்டு | மதுரைக்காஞ்சி |
| முல்லைப்பாட்டு | திருமுருகாற்றுப்படை |
| நெடுநல்வாடை | பொருநராற்றுப்படை |
| பட்டினப்பாலை | பெரும்பாணாற்றுப்படை |
| | சிறுபாணாற்றுப்படை |
| | கூத்தராற்றுப்படை |

# தமிழ் இலக்கணங்களில் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படைச் செய்திகள்

எழுத்து (2)

## முதலெழுத்து (12+18)

### உயிரெழுத்து (7+5)

குறில் (5)
அ
இ
உ
எ
ஒ

நெடில் (7)
ஆ
ஈ
ஊ
ஏ
ஐ
ஓ
ஔ

### மெய்யெழுத்து (6+6+6)

**வல்லினம்** (க ச ட த ப ற)
**மெல்லினம்** (ங ஞ ண ந ம ன)
**இடையினம்** (ய ர ல வ ழ ள)

## சார்பெழுத்து (10)

உயிர்மெய் (2X108=216)
ஆய்தம் (8)
உயிரளபெடை (7X3=21)
ஒற்றளபெடை (6X7=42)
குற்றியலிகரம் (37)
குற்றியலுகரம் (6X6=36)
ஐகாரக்குறுக்கம் (3)
ஔகாரக்குறுக்கம் (1)
மகரக்குறுக்கம் (3)
ஆய்தக்குறுக்கம் (2)

உயிரெழுத்து 12
**அ** முதல் **ஔ** வரை

X

மெய்யெழுத்து 18
**க்** முதல் **ன்** வரை

=

உயிர்மெய் எழுத்து
(12X18=216)
**க** முதல் **னௌ** வரை


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## திருக்குறள் பகுப்பு முறை பட்டியல்

| பொருள் பிரிவுகள் | அதிகாரம் எண்ணிக்கை | இயல் எண்ணிக்கை | இயல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அறத்துப்பால் | 38 | 4 | பாயிரவியல் (04)<br>இல்லறவியல் (20)<br>துறவறவியல் (13)<br>ஊழியல் (01) |
| பொருட்பால் | 70 | 3 | அரசியல் (25)<br>அமைச்சியல் (32)<br>ஒழிபியல் (13) |
| காமத்துபால் | 25 | 2 | களவியல் (07)<br>கற்பியல் (18) |

## கடையெழு வள்ளல்களின் சிறப்பு

| வள்ளல்கள் | சிறப்பு |
|---|---|
| 1) பேகன் → | மயிலுக்குப் போர்வை அளித்தவன் |
| 2) பாரி → | முல்லைக்குத் தேர் தந்தவன் |
| 3) காரி → | இரவலர்க்குக் குதிரைகள் நல்கியவன் |
| 4) ஆய் அண்டிரன் → | நீலமணியையும் நாகம் தந்த கலிங்கத்தையும் சிவனுக்கு அளித்தவன் |
| 5) அதியமான் நெடுமான் அஞ்சி → | ஔவைக்கு நெல்லிக்கனி தந்தவன் |
| 6) நள்ளி | தன் மனதில் உள்ளதை மறைக்காமல் கூறி நாடி வந்தவர்களையும் நகைக்கச் செய்பவன். பிறர்க்குப் பொருள்களை வாரி வழங்குபவன் |
| 7) ஓரி → | இரவலர்க்கு நாடுகளைப் பரிசிலாக நல்கியவன் |

## நிலமும் உரிபொருளும்

| நிலம் | உரிபொருள் |
|---|---|
| குறிஞ்சி → | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| முல்லை → | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| மருதம் → | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் → | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| பாலை → | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |

## முதற்பொருளும் உரிப்பொருளும்

| திணை | நிலம் | பெரும்பொழுது | சிறுபொழுது | ஊரிப்பொருள் |
|---|---|---|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த நிலமும் | கூதிர். முன்பனி | யாமம் | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| முல்லை | காடும் காடு சார்ந்த நிலமும் | கார் | மாலை | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த நிலமும் | ஆறு பெரும் பொழுதுகளும் | வைகறை | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த நிலமும் | ஆறு பெரும் பொழுதுகளும் | ஏற்பாடு | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| பாலை | சுரமும் சுரம் சார்ந்த நிலமும் | இளவேனில் முதுவேனில் | நண்பகல் | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# கருப்பொருள்

| நிலம் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| மக்கள் | பொருப்பன், வெற்பன், சிலம்பன், கொடிச்சி | குறும்பொறை நாடன் தோன்றல் கிழத்தி | ஊரன், மகிழ்நன் மனைவி | சேர்ப்பன் புலம்பன் | விடலை, மீளி, எயிற்றி |
| | குறவர், குறத்தியர் கானவர் | இடையர், இடைச்சியர் ஆயர், ஆய்ச்சியர் | உழவர், உழத்தியர் கடையர், கடைசியர் | நுளையர் நுளைச்சியர் கடையர் கடைசியர் | எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர் |
| புள் | கிளி, மயில் | காட்டுக்கோழி | நாரை, மகன்றில், அன்னம் | கடற்காகம் | புறா, பருந்து, கழுகு |
| விலங்கு | சிங்கம், புலி, கரடி | மான், முயல் | எருமை, நீர்நாய் | சுறாமீன் | செந்நாய் |
| ஊர் | சிறுகுடி | பாடி | பேரூர், மூதூர் | பாக்கம், பட்டினம் | எறும்பு |
| நீர் | அருவி நீர் சுனை நீர் | குறுஞ்சுனை கானாறு | ஆற்று நீர், கிணற்று நீர், குளத்து நீர் | ஊவர் நீர்க் கேணி, சுவர் நீர்க் கேணி | நீரிலாக் குழி, கிணறு |
| பூ | வேங்கை, காந்தள், குறிஞ்சி | முல்லை பிடவம், தோன்றி | தாமரை, குவளை | நெய்தல், தாழை | குராஅம்பூ மராம்பூ |
| மரம் | சந்தனம், தேக்கு, அகில், மூங்கில் | கொன்றை, காயா, குருந்தம் | மருதம், வஞ்சி, காஞ்சி | புன்னை, ஞாழல் | பாலை, உழிஞை, ஓமை |
| உணவு | மலைநெல் தினை, மூங்கிலரிசி | வரகு, சாமை, முதிரை | செந்நெல், வெண்ணெல் | உப்பும், மீனும் விற்றுப் பெற்ற பொருள் | வழியிற் பறிக்க பொருள் |
| பறை | தொண்டகப் பறை | ஏற்கோட்பறை | நெல்லரிகிணை, மணமுழவு | மீன்கோட் பறை நாவாய்ப் பம்பை | துடி |
| யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லையாழ் | மருதயாழ் | விளரியாழ் | பாலையாழ் |
| பண் | குறிஞ்சி பண் | சாதாரிப் பண் | மருதப் பண் | செவ்வழிப்பண் | பஞ்சுரப்பண் |
| தொழில் | வெறியாடல், மலை நெல்விதைத்தல் தேன் எடுத்தல் கிழங்கு அகழ்தல் | சாமை, வரகு விதைத்தல், களைகட்டல் அரிதல் | வயலில் களை கட்டல், நெல்லரிதல் | உப்பு உண்டாக்கல் விற்றல், மீன் பிடித்தல், உணக்கல் | போர் செய்தல் சூறையாடல் |
| பறை | தொண்டகம் | ஏறு கோட்பாறை | மணமுழா நெல்லிரிகிணை | மீன்கோட்பாறை | துடி |
| யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லை யாழ் | மருதப் பண் | செவ்வழிப் பண் | பஞ்சுரப் பண் |
| பண் | குறிஞ்சிப் பண் | முல்லைப் பண் | மருதப் பண் | செவ்வழிப் பண் | பஞ்சுரப் பண் |
| தெய்வம் | முருகன் | திருமால் | வேந்தன் (இந்திரன்) | வருணான் | கொற்றவை |
| மக்கள் | வெற்பண் குறவன் குறத்தி | தோன்றல் ஆயன் ஆய்ச்சி | ஊரன் உழவன் உழத்தி | சேர்ப்பவன் பரதன், பரத்தி | எயினன் மறவன் மறத்தி |
| ஊர் | சிறுகுடி | பாடி சேரி | பேரூர், மூதூர் | பட்டினம் பாக்கம் | குறும்பு |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# தேர்வு எழுதும் கால அட்டவணை

## மாதிரி வினாத்தாள்

**90 மதிப்பெண்கள்**

| | | |
|---|---|---|
| I | பலவுள் தெரிக | 14X1=14 |
| | | செய்யுள் உரைநடை (வினா எண் 1 முதல் 6 வரை) |
| | | இலக்கணம் மொழிப்பயிற்சி துணைப்பாடம் |
| | | (வினா எண் 7 முதல் 14 வரை) |
| II | குறுவினா | 3X2=6 |
| | | செய்யுள் (வினா எண் 15 முதல் 18 வரை) |
| | | 2X2=4 |
| | | உரைநடை (வினா எண் 19 முதல் 21 வரை) |
| | | 7X2=14 |
| | | இலக்கணம் மொழிப்பயிற்சி |
| | | (வினா எண் 22 முதல் 30 வரை) |
| III | சிறுவினா | 2X4=8 |
| | | செய்யுள் (வினா எண் 31 முதல் 33 வரை) |
| | | 2X4=8 |
| | | உரைநடை (வினா எண் 34 முதல் 36 வரை) |
| | | 3X4=12 |
| | | மொழித்திறன் பயிற்சிகள் (வினா எண் 37 முதல் 40 வரை) |
| IV | நெடுவினா | 2X6=12 |
| | | செய்யுள் (வினா எண் 41) |
| | | உரைநடை (வினா எண் 42) |
| | | 1X6=6 |
| | | துணைப்பாடம் (வினா எண் 43) |
| V | மனப்பாடப்பகுதி | 4+2=6 |
| | | (வினா எண் 44) |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# பொருளடக்கம்
# பன்னிரண்டாம் வகுப்புத் தமிழ்


| | | |
|---|---|---|
| பொருளடக்கம் | | |
| தமிழில் அடிப்படையாய் அறிந்துகொள்ள வேண்டியவை | | |
| படைப்புகளும் ஆசிரியர் பெயர்களும் | | |
| இயல் - 1 | | |
| பாடத்தலைப்புகள் | ஆசிரியர் | பக்கம் |
| இளந்தமிழே ! | சிற்பி பாலசுப்பிரமணியம் | 10 |
| தமிழ்மொழியின் நடை அழகியல் | தி.சு. நடராசன் | 14 |
| தன்னேர் இலாத தமிழ் (தண்டியலங்காரம்)• | தண்டி | 22 |
| தம்பி நெல்லையப்பருக்கு | பாரதியார் | 24 |
| தமிழாய் எழுதுவோம் | | 27 |
| மொழியை ஆள்வோம் | | 30 |
| மொழியோடு விளையாடு | | 34 |
| இயல் 2 | | |
| பெருமழைக்காலம் | | 36 |
| பிறகொரு நாள் கோடை | அய்யப்ப மாதவன் | 44 |
| நெடுநல்வாடை• | நக்கீரர் | 46 |
| முதல்கல் | உத்தம சோழன் | 50 |
| நால்வகைப் பொருத்தங்கள் | | 52 |
| மொழியை ஆள்வோம் | | 55 |
| மொழியோடு விளையாடு | | 58 |
| இயல் 3 | | |
| தமிழர் குடும்ப முறை | பக்தவத்சல பாரதி | 60 |
| விருந்தினர் இல்லம் | ஜலாலுத்தீன் ரூமி | 68 |
| கம்பராமாயணம்• | கம்பர் | 70 |
| உரிமைத்தாகம் | பூமணி | 77 |
| பொருள் மயக்கம் | | 79 |
| திருக்குறள்• | திருவள்ளுவர் | 83 |
| மொழியை ஆள்வோம் | | 93 |
| மொழியோடு விளையாடு | | 96 |
| இயல் 4 | | |
| பண்டைய காலத்துப் பள்ளிக் கூடங்கள் | உ.வே.சாமிநாதர் | 98 |
| இதில் வெற்றிபெற• | சுரதா | 107 |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| இடையீடு | சி.மணி | 112 |
| புறநானூறு• | ஔவையார் | 114 |
| பாதுகாப்பாய் ஒரு பயணம் | | 117 |
| பா இயற்றப் பழகலாம் | | 120 |
| மொழியை ஆள்வோம் | | 126 |
| மொழியோடு விளையாடு | | 130 |
| இயல் 5 | | |
| மதராசப்பட்டினம் | | 132 |
| தெய்வமணிமாலை• | இராமலிங்க அடிகளார் | 145 |
| தேவாரம் | திருஞானசம்பந்தர் | 148 |
| அகநானூறு | அம்மூவனார் | 151 |
| தலைக்குளம் | தோப்பில் முகமது மீரான் | 156 |
| படிமம் | | 159 |
| மொழியை ஆள்வோம் | | 165 |
| மொழியோடு விளையாடு | | 167 |
| இயல் 6 | | |
| திரைமொழி | | 169 |
| கவிதைகள் | நகுலன் | 178 |
| சிலப்பதிகாரம் புகார்க்காண்டம்• | இளங்கோவடிகள் | 181 |
| தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் | தொல்காப்பியர் | 192 |
| நடிகர் திலகம் | பாலச்சந்திரன் சுள்ளிக்காடு | 196 |
| காப்பிய இலக்கணம் | | 199 |
| திருக்குறள்• | திருவள்ளுவர் | 205 |
| மொழியை ஆள்வோம் | | 215 |
| மொழியோடு விளையாடு | | 217 |
| இயல் 7 | | |
| இலக்கியத்தில் மேலாண்மை | வெ. இறையன்பு | 220 |
| அதிசய மலர் | தமிழ்நதி | 228 |
| தேயிலைத் தோட்டப் பாட்டு | முகம்மது இராவுத்தர் | 231 |
| புறநானூறு• | பிசிராந்தையார் | 235 |
| சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும் | ஐராவதம் மகாதேவன் | 238 |
| தொன்மம் | | 240 |
| மொழியை ஆள்வோம் | | 243 |
| மொழியோடு விளையாடு | | 247 |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| இயல் 8 | | |
|---|---|---|
| நமது அடையாளங்களை மீட்டவர் | | 252 |
| முகம் | சுகந்தி சுப்பிரமணியன் | 261 |
| இரட்சணிய யாத்ரிகம்• | எச்.ஏ.கிருட்டிணனார் | 263 |
| சிறுபாணாற்றுப்படை• | நத்தத்தனார் | 269 |
| கோடை மழை | சாந்தா தத் | 276 |
| குறியீடு | | 279 |
| மொழியை ஆள்வோம் | | 282 |
| மொழியோடு விளையாடு | | 284 |
| மனப்பாடப் பகுதி | | 288 |

| வ. எண் | இலக்கணம், மொழித்திறன் பயிற்சிகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | அணிகள் | 293 |
| 2. | திணைகள் | 297 |
| 3. | பாநயம் | 299 |
| 4. | கவிதைகள் | 308 |
| 5. | வாழ்க்கை நிகழ்வு | 312 |
| 6. | ஆங்கிலப் பழமொழிகளுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகள் | 320 |
| 7. | இலக்கணக் குறிப்பு | 328 |
| 8. | பகுபத உறுப்பிலக்கணம் | 333 |
| 9. | புணர்ச்சி விதிகள் | 341 |
| 10. | ஆங்கிலச்சொல் - கலைச்சொல்லாக்கம் | 346 |
| 11. | விரித்தெழுதுக | 347 |
| 12. | மயங்கொலிச் சொற்கள் | 347 |
| 13. | ண, ன வேறுபாடுடைய சொற்கள் | 348 |
| 14. | வாக்கியப்பிழை | 349 |
| 15. | தொடர் அமைக்க | 351 |
| 16. | சொல்லை பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க | 353 |
| 17. | பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்று | 353 |
| 18. | துளிப்பா | 354 |
| 19. | ஈற்றடிச் சொற்கள் | 354 |
| 20. | மரபுப் பிழையை நீக்கி எழுதுக | 354 |
| 21. | பொருள் வேறுபாடு தருக | 357 |
| 22. | விடைக்கேற்ற வினா அமைத்திடுக | 357 |
| 23. | சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடரமைக்க | 358 |
| 24. | மாதிரி வினாத்தாள் | 361 |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


# இயல் - 1

## செய்யுள் - இளந்தமிழே!

- சிற்பி பாலசுப்பிரமணியம்

**ஆசிரியரைப் பற்றி :**

பாடப்பகுதி சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய நிலவுப்பூ கவிதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது. இவர் கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர் என்ற பன்முகங்கள் கொண்டவர். இவர் பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர். இவர் ஒரு கிராமத்து நதி என்னும் நூலிற்காகச் சாகித்திய அகாதெமி விருது பெற்றவர். இவருடைய கவிதைகள் ஆங்கிலம், கன்னடம் மலையாளம், மராத்தி, இந்தி ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவர் ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி ஆகிய கவிதை நூல்களை ஆக்கியவர். இவர் இலக்கியச் சிந்தனைகள், மலையாளக் கவிதை, அலையும் சுவடும் ஆகிய உரைநடை நூல்களை எழுதியவர். மலையாளத்திலிருந்து கவிதைகளையும் புதினங்களையும் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினராகவும் இருக்கிறார்.

**அ) பலவுள் தெரிக. (பாடநூலில் உள்ள ஒரு மதிப்பெண் வினாக்கள்)**

1. “மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு” கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது ங) வள்ளல்களைத் தந்தது

உ) பொதிகையில் தோன்றியது

அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி

இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி

**விடை : ஆ) க, ங இரண்டும் சரி**

2. பொருத்துக **(QY ’19), (PTA-2)

அ) தமிழ் அழகியல் 1. பரலி சு. நெல்லையப்பர்

ஆ) நிலவுப்பூ 2. தி.சு. நடராசன்

இ) கிடை 3. சிற்பி பாலசுப்பிரமணியம்

ஈ) உய்யும் வழி 4. கி.ராஜநாராயணன்

அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

**விடை : ஈ) 2, 3, 4, 1**

**ஆ) குறுவினா. (பாடநூலில் உள்ள இரண்டு மதிப்பெண் வினாக்கள்)**

1. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்? *(MAR ’20)

- தொழிலாளரின் கைகள் எல்லாம் உழைத்து உழைத்துத் வானைப் போலச் சிவந்து இருக்கிறது.
- கடும் உழைப்பின் மிகுதியால் அவர்களின் தோள் மீது வியர்வைத் துளிகள் முத்துமுத்தாய்த் தோன்றுகிறது.
- எனவே தொழிலாளர்களின் உழைப்பின் சிறப்பை வியந்து பாடத் தமிழின் துணை வேண்டும் என்கிறார்.

**இ) சிறுவினா. (பாடநூலில் உள்ள நான்கு மதிப்பெண் வினாக்கள்)**

1. ‘செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்’ தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக. *(HY ‘19)


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

- மாலை நேரத்தில் செந்நிறமுடைய சூரியன் மலைகளுக்குப் பின்னால் மறைகிறது.
- சூரியனின் செந்நிறமானது வானம் முழுவதும் தோன்றுகிறது. இக்காட்சியானது வானமெல்லாம் சிவப்பு நிறப்பூக்கள் போலக் காணப்படும்.

**"செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்**
**செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்!"**

- தொழிலாளரின் கைகள் எல்லாம் உழைத்து உழைத்துத் வானைப் போலச் சிவந்து இருக்கிறது.
- கடும் உழைப்பின் மிகுதியால் அவர்களின் தோள் மீது வியர்வைத் துளிகள் முத்துமுத்தாய்த் தோன்றுகிறது என்பதே இத்தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயமாகும்.

2. பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக் காட்டுக.

i. பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே.

- நன்னூல்

ii. மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு
மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலேமீண்டுமந்தப் பழமைநலம் புதுக்குதற்கு
மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!

- சிற்பி பாலசுப்பிரமணியம்

**நன்னூல் குறிப்பிடுவன:**

**புதியதோர் உலகம் செய்வோம்**

- காலத்திற்கேற்ப நல்லனவற்றில் பழமைகள் நீங்கிப் புதுமைகள் தோன்றுவது ஒன்றும் தவறில்லை.
- எனவே இந்நாட்டில் புதுமை தோன்றுதல் வேண்டும்.

**இளந்தமிழே குறிப்பிடுவன:**

**பழமையே பாராளும்**

- பாண்டியர்களால் சங்கம் வைத்து வளர்க்கப்பட்ட தமிழ், பாரி, ஓரி, பேகன் போன்ற வள்ளல்களைத் தோற்றுவித்தது. அதுபோன்ற பழமைகள் மீண்டும் நடைபெற வா! வா! எனத் தமிழை அழைக்கிறார் கவிஞர் சிற்பி.
- பழமை மீண்டும் மலர வேண்டும்

**ஈ) நெடுவினா. (பாடநூலில் உள்ள ஆறு மதிப்பெண் வினாக்கள்)**

1. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

செய்யுள் : இளந்தமிழே

இயற்றியவர் : சிற்பி பாலசுப்பிரமணியம்

**குறிப்புச் சட்டகம்**
1. முன்னுரை
2. தமிழ்மொழியின் உவமைநயம்
3. செந்தமிழின் துணை
4. தமிழின் பழஞ்சிறப்பு
5. தமிழின் சீரிளமை
6. முடிவுரை


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**முன்னுரை**

தமிழ்மொழி நம் நாட்டின் அடையாளம், பண்பாட்டின் நீட்சி. தோன்றிய காலந்தொட்டுத் தமிழ் பல புதிய உள்ளடக்கங்களால் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு பழஞ்சிறப்பைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பது கவிஞர்களின் ஆசை. அவ்வசையை நயம்பட எடுத்துரைப்பதை இக்கட்டுரையில் காணலாம்.

**தமிழ்மொழியின் உவமைநயம்**

மாலைநேரத்தில் சிவந்த நிறமுடைய சூரியன் மலைகளுக்குப் பின்னால் மறைகிறது. சூரியனின் செந்நிறமானது வானம் முழுவதும் பிரதிபலிக்கிறது. இக்காட்சி வானமெல்லாம் சிவப்பு நிறப்பூக்கள் பரவிக் கிடப்பது போலக் காணப்படுகிறது.

**"செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்**
**செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்!"**

**செந்தமிழின் துணை**

உழைக்கும் தொழிலாளர்களின் கைகள் எல்லாம் வானைப் போலச் சிவந்து இருக்கிறது. உழைப்பின் மிகுதியால் அவர்களின் தோள்மீது வியர்வைத் துளிகள் முத்துமுத்தாய்த் தோன்றுகிறது. இவை அனைத்தையும் வியந்து பாடச் செந்தமிழைத் தவிர வேறு துணை உண்டோ? என்று பாடுகிறார் கவிஞர்.

**"தாம் உழைக்கும் தொழிலாளர் வியர்வை வெள்ளம்**
**விம்முகின்ற தோள்மீதில் முத்துமுத்தாய்**
**வீற்றிருக்கும் ................................"**

**தமிழின் பழஞ்சிறப்பு:**

பெருகி வரும் கவிதைகளுக்கு உணவாய் இருப்பது முத்தமிழே! பாண்டியர்களின் சங்கத்தில் கொலுவாக இருந்ததும் முத்தமிழே! பாரி, ஓரி, பேகன் போன்ற வள்ளல்களை ஈன்று தந்ததும் தமிழே!

**"பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்**
**பாரி முதல் வள்ளல்களை ஈன்று தந்தாய்"**

**தமிழின் சீரிளமை:**

அதுபோன்று மீண்டும் அந்தப் பழமையைப் புதுப்பித்து மெய்சிலிர்க்க தமிழ் குயிலே வா வா! என்றும், கூண்டை உடைத்து எழுந்த சிங்கம் போலக் குளிர்பொதிகைத் தென்தமிழே சீறி வா, வா! என்றும் தமிழைக் கவிஞர் அழைக்கிறார்.

**"கூண்டுதனை உடைத்தெழுந்த சிங்கம் போலக்**
**குளிர்பொதிகைத் தென்தமிழே சீறி வா! வா!"**

**முடிவுரை**

தமிழின் பெருமைகளைப் பேசாத மரபுக் கவிஞர்கள் இல்லை எனலாம். அதுபோல இங்குத் தமிழின் சீரிளமையை வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் பாடியிருக்கிறார். சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் 'இளந்தமிழே!' என்ற கவிதையில் தமிழை வியந்து எவ்வாறு போற்றி உள்ளார்

அன்னைத் தமிழை ஆரமுதத் தீஞ்சுவையை
முன்னைப் பிறந்தும் மூப்பறியா இளந்தமிழை
கன்னித் தமிழினிலே கவிஞர் சிற்பியாரும்
உன்னதமாய்ப் படைத்துள்ளார் உளங்கனிந்து போற்றுவோமே!


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# மேலும் சில வினாக்கள்

## ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. இளந்தமிழே கவிதையின் ஆசிரியர் சிற்பி பாலசுப்பிரமணியம்.
2. மலைமேட்டில் தலையைச் சாய்ப்பவன் செம்பரிதி.
3. வானம் எவ்வாறு காட்சியளிக்கிறது? செந்நிறத்துப் பூக்காடாகக் காட்சியளிக்கிறது.
4. தொழிலாளரின் உழைப்பின் சிறப்பை வியந்துபாட ஏற்ற துணை செந்தமிழ்.
5. மூண்டுவரும் கவிதைவெறிக்கு உணவு முத்தமிழ்.
6. பாரிமுதல் வள்ளல்களை ஈன்று தந்தது முத்தமிழ்.
7. இளந்தமிழே கவிதை இடம்பெற்றுள்ள கவிதைத் தொகுப்பு நிலவுப்பூ.
8. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் பன்முகங்களில் ஒன்று கவிஞர்.
9. பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர் சிற்பி பாலசுப்பிரமணியம்.
10. ஒரு கிராமத்து நதி என்னும் நூலிற்காகச் சாகித்திய அகாதெமி விருது பெற்றவர் சிற்பி பாலசுப்பிரமணியம்.

## குறுவினாக்கள் (இரண்டு மதிப்பெண் வினாக்கள்)

**1. தொழிலாளரின் நிலை என்ன?**

செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்க்கும்பொழுது வானம் சிவப்பு நிறமாகக் காட்சியளிக்கிறது. அதுபோல உழைப்பாளர்களின் கைகள் அவர்களின் உழைப்பால் சிவந்து காட்சியளிக்கின்றன. அவர் உழைத்த உழைப்பால் அவர்களின் உடம்பின்மேல் முத்துமுத்தாய் வியர்வை வெள்ளம் காணப்படுகிறது.

**2. தமிழை எதற்காகச் சிற்பி பாலசுப்பிரமணியம் அழைக்கிறார்?**

தமிழ் மூண்டுவரும் கவிதைவெறிக்கு உணவாய் உள்ளது. முன்னம் ஒருநாள் பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது. பாரிமுதல் வள்ளல்களை ஈன்றுதந்தது. மீண்டும் அந்தப் பழமைநலத்தைப் புதுக்குதற்கு மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே வா என்று அழைக்கிறார். மேலும் கூண்டதனை உடைத்தெழுந்த சிங்கம்போலக் குளிர்பொதிகைத் தமிழே சீறி வா என்கிறார்.

**3. தமிழைக் குளிர்பொதிகைத் தென்தமிழ் எனக் கவிஞர் ஏன் குறிப்பிடுகிறார்?**

பொதிகை மலையில் இருந்து அகத்தியர் தமிழ் வளர்த்ததால் தமிழைக் குளிர்பொதிகைத் தென்தமிழ் என்கிறார் கவிஞர்.

**4. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் பன்முகத் தன்மைகள் எவை?**

i. கவிஞர ii. பேராசிரியர் iii. மொழிபெயர்ப்பாளர் iv. இதழாசிரியர்

**5. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்ட மொழிகள் எவை?**

i. ஆங்கிலம் ii. கன்னடம் iii. மலையாளம் iv. மராத்தி v. இந்தி

**6. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் பிற கவிதை நூல்கள் எவை?**

ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி.

**7. சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய உரைநடை நூல்கள் எவை?**

i. இலக்கியச் சிந்தனைகள் ii. மலையாளக் கவிதை iii. அலையும் சுவடும்


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# இயல் - 1

## உரைநடை தமிழ்மொழியின் நடை அழகியல்

- தி.சு.நடராசன்

**ஆசிரியரைப் பற்றி :**

பாடப்பகுதி தி.சு.நடராசன் எழுதிய தமிழ் அழகியல் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் தி.சு.நடராசன். திறனாய்வாளராகப் பரவலாக அறியப்படும் இவர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகம், திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். கவிதையெனும் மொழி, திறனாய்வுக்கலை, தமிழ் அழகியல், தமிழின் பண்பாட்டு வெளிகள் உள்ளிட்ட நூல்களை எழுதியுள்ளார்.

### அ) பலவுள் தெரிக. (பாடநூலில் உள்ள ஒரு மதிப்பெண் வினாக்கள்)

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்.................

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்

இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

**விடை : இ) தொல்காப்பியம்**

2. கருத்து 1 : இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.
கருத்து 2 : தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது. *(PTA-5)

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி

இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

**விடை** : இ) இரண்டு கருத்தும் சரி

### ஆ) குறுவினா. (பாடநூலில் உள்ள இரண்டு மதிப்பெண் வினாக்கள்)

1. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக. **(QY '19), (HY '19)

i. "நடைபெற்றியலும்"
"நடைநவின்றொழுகும்"
"ஆசிரிய நடைத்தே வஞ்சி" ஆகியன தொல்காப்பியம் சுட்டும் தொடர்கள்.

ii. மொழியின் தனிச்சிறப்பான கூறுகளும் அவற்றைக் கையாளுகின்ற வகைமைகளும் கவிதையின் உந்துசக்தியாக அமைகின்றன.

iii. மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமைமிக்க ஆற்றல் கவிதைக்காக, இலக்கியத்துக்காகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

iv. கவிதையின் இயங்காற்றல்தான் நடை எனத் தொல்காப்பியம் கருதுகிறது.

2. ''படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக'' இச் சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.

| | |
|---|---|
| படாஅம் | செய்யுளிசை அளபெடை |
| கெடாஅ | செய்யுளிசை அளபெடை |
| கடாஅ | செய்யுளிசை அளபெடை |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

3. விடியல், வனப்பு இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.

மார்கழி விடியலில் வண்ணக் கோலமிடுவது வனப்பு மிகுதியாக இருக்கும்.

விடியல் - அதிகாலை

வனப்பு - அழகு

**இ) சிறுவினா (பாடநூலில் உள்ள நான்கு மதிப்பெண் வினாக்கள்)**

1. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் விளக்குக. *(QY '19)

எந்தத் தொன்மையான மொழியும் சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும் தான் தொடங்குகிறது. மொழி சார்ந்த கவிதையும் இசையோடும் இசைக்கருவியோடும்தான் பிறக்கிறது. ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன.

**"கடந்தடு தானை மூவிரும் கூடி**
**உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே;"**

இப்பாடலில் வன்மையான உணர்ச்சியைக் காட்டுகின்ற விதத்தில் க, த, ட, ற முதலிய வல்லின மெய்கள் இடையின மெய்களைக் காட்டிலும் அதிகமாக வருதலை அறிந்து கொள்ளலாம்.

**"படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசை**
**கடாஅ யானைக் கலிமான் பேக"**

உயிர் ஒலிகள் குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பவரல் தன்மை பெற்றிருக்கும். இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுக்களும் இங்கே ஒலிக்கோலத்திற்கு முக்கியப் பண்பாக வகுக்கப்பட்டுள்ளது.

**ஈ) நெடுவினா (பாடநூலில் உள்ள ஆறு மதிப்பெண் வினாக்கள்)**

1. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக. *(PTA-1,5)

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. ஒலிக்கோலங்கள்
3. சொற்புலம்
4. இலக்கியங்களில் சொற்புலம்
5. தொடரியல் போக்கு
6. முடிவுரை

**முன்னுரை :**

**"ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை**
**வெண்பா நடைத்தே கலி"**

தொல்காப்பியம் இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற நூலாகும். அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி முதலியவை மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை. இலக்கியம் என்ற மொழிசார் கலை மொழியின் தனித்துவமான பண்புகளை எடுத்துரைக்கின்றது. இதனால் மொழி சார்ந்த பொருள், மொழி சார்ந்த கலையாக மாறிவிடுகின்றது.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**ஒலிக்கோலங்கள் :**

எந்தத் தொன்மையான மொழியும் சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும் தான் தொடங்குகிறது. மொழி சார்ந்த கவிதையும் இசையோடும் இசைக்கருவியோடும்தான் பிறக்கிறது. ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன.

**"கடந்தடு தானை மூவிரும் கூடி**
**உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே;"**

இப்பாடலில் வன்மையான உணர்ச்சியைக் காட்டுகின்ற விதத்தில் க, த, ட, ற முதலிய வல்லின மெய்கள் இடையின மெய்களைக் காட்டிலும் அதிகமாக வருதலை அறிந்து கொள்ளலாம்.

**சொற்புலம்**

சொல்லில்தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன. கலையும் பண்பாடும் அரசியலும் பொதிந்து கிடக்கின்றன. சொல்வளம் என்பது ஒரு பொருள் குறித்துவரும் பல சொல்லாய், பல பொருள் குறித்து வரும் ஒரு சொல்லாய் வருதலும் பல துறைகளுக்கு உணர்வும் தெளிவும் கொண்டதாய் வருதலும் என்ற செழிப்பான தளத்தில் சொல் விளைச்சல் கண்டிருப்பதைக் குறிப்பதும் ஆகும்.

**இலக்கியங்களில் சொற்புலம்**

முல்லைக்கலியில், காளைகளின் பல இனங்களைச் சுட்டும் சொற்கள் நிரம்பியிருக்கின்றன. இன்றைய இலக்கியத்தில் இப்படித்தான் கி.ராஜநாராயணன் எழுதிய கிடை என்னும் குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்களைப் பல பெயர்களைச் சொல்லி அழைக்கிறார்.

**தொடரியல் போக்கு :**

உரைநடை வழக்கு, பேச்சு வழக்கு உள்ளிட்ட இயல்பு வழக்கில் தொடரமைப்பு என்பது எழுவாய் + செயப்படுபொருள் அல்லது பிறவற்றுடன் கூடிய அமைப்பு + பயனிலை என்று வருவதே மரபு. ஆனால் சங்கப் பாடல்கள் பலவற்றில் இது மாறி வருகிறது. சான்றாக

**"இடுக வொன்றோ, சுடுக வொன்றோ;**
**படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே"** (புறம்.239)

இப்பாடல் ஒவ்வோர் அடியும் தனித்தனியே வினைமுற்றுகளோடும் தன்னிறைவோடும் முடிவு பெற்று, 18 பண்புகளைக் கூறி, "புதைத்தால் புதை; சுட்டால் சுடு" எனத் தொடரியல் சார்ந்த வடிவமைப்பினைப் பெற்றுள்ளது.

**முடிவுரை :**

நடையியல், வடிவமைப்பின் பகுதிகளையும், முழுமையினையும் சார்ந்தே இருக்கிறது. அத்தகைய தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்குச் சங்க இலக்கியமே முதன்மை ஆதாரமாக விளங்குகிறது.

தனிமனிதர் நடைபோட்டு வரும்போதே அவரை எடை பார்த்துச் சொல்பவர் மனிதருள் புனிதர். அவ்வாறே கவிதையும் தடை உடைத்துப் படைநடத்தி மடைதிறந்த வெள்ளமென வெளிப்படும்பொழுது ஒலிக்கோலம், சொற்புலம், தொடரியல் போக்குகளால் கவிதை உந்து சக்தியாக அமைகின்றன; இயல்பாக இயங்குகின்றன. இதற்குச் சங்க இலக்கியங்களே முதன்மை ஆதாரமாக விளங்குகின்றன.

## மேலும் சில வினாக்கள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. தமிழ்மொழியின் நடை அழகியல் உரைநடைப் பகுதியின் ஆசிரியர் தி.சு. நடராசன்.
2. ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை
வெண்பா நடைத்தே கலி இப்பாடலடிகள் இடம் பெற்ற நூல் தொல்காப்பியம்


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

3. தமிழ்மொழியில் அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தந்த நூல் தொல்காப்பியம்
4. உலகின் தொன்மையான மொழி தமிழ்
5. இந்தப் பேரண்டத்தின் செய்தி அழகு
6. வரலாற்றுக் காலத்தின் தொடக்கம் சங்க இலக்கியம்
7. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கணம் தொல்காப்பியம்.
8. செய்யுளை ஓர் உள்ளமைப்பாகப் பேசும் இலக்கணம் தொல்காப்பியம்
9. எல்லாக் கலைகளினின்றும் வேறுபட்டது கவிதைக்கலை என்று உணர்த்தும் நூல் தொல்காப்பியம்.
10. இலக்கியம் சார்ந்த கலை மொழிசார் கலை.
11. இலக்கியத்தின் மூன்று முக்கியக் கூறுகள் அறம், பொருள், இன்பம்.
12. இலக்கியத்தின் நோக்கத்தைப் பற்றி முழுமையாகப் பேசும் நூல் தொல்காப்பியம்.
13. இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறவியல் சார்ந்த கருத்துநிலைகள் இவை இணைந்தது கலை முழுமை.
14. அகத்திணை சார்ந்த செய்திகளையும் புறத்திணை சார்ந்த செய்திகளையும் பாடுபொருளாகக் கொண்டவை சங்க இலக்கியங்கள்.
15. அன்பின் ஐந்திணைகளைப் பாடும் நூல் தொல்காப்பியம்.
16. அறவியல் லட்சியப் பொருள்கள் அறம், பொருள், இன்பம்.
17. தொல்காப்பியம் கூறும் பா வகைகள் நான்கு.
18. பா வகைகளோடு அறவியலை இணைத்துச் சொல்லும் நூல் தொல்காப்பியம்.
19. கவிதையின் நடையியல் கூறுகளில் மிக முக்கியமானவை ஒலிக்கோலம், சொற்களின் புலம், தொடரியல் போக்கு.
20. கவிதையின் நடை பற்றிய இலக்கணம் பேசும் நூல் தொல்காப்பியம்.
21. கவிதையின் உந்துசக்தியாகச் செயல்படுபவை மொழி, கையாளப்படும் விதம்.
22. கவிதையின் இயங்காற்றல் நடை.
23. மொழியின் தொடக்கம் எவ்வாறு இருந்தது? இசையாகவும் செய்கையாகவும்.
24. கவிதையின் பிறப்பிடம் இசைக்கருவியும்.
25. மொழி கலைவடிவம் கொள்ளக்காரணமாக அமைபவை இசையும் பொருளும்.
26. கவிதையில் வன்மையான உணர்ச்சியைக் காட்டுகின்ற விதத்தில் வரும் எழுத்துக்கள் வல்லின எழுத்துக்கள் (க, ச, ட, த, ப, ற).
27. பாடலில் வல்லின மெல்லின இடையின எழுத்துக்கள் அமைவதைக் குறிப்பது ஒலிக்கோலம்.
28. சங்கப் பாடல்களில் முக்கியமான இடத்தைப் பெற்றிருப்பது ஒலிக்கோலம்.
29. பேச்சையும் கவிதையையும் வேறுபடுத்திக் காட்டுவது ஒலிக்கோலம்.
30. வன்மையான உணர்ச்சிகளைக் காட்டுபவை வல்லின மெய்கள்.
31. உணர்வும் பொருளும் பொதிந்து கிடப்பது சொல்லில்.
32. ஒரு சொல்லாய்ப் பல பொருள் குறித்தும் பல சொல்லாய் ஒரு பொருள் குறித்தும் வருவதை எவ்வாறு கூறுவது? சொல்வளம்


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

33. மொழியில் உணர்வையும் தெளிவையும் வெளிப்படுத்துவது சொல்
34. காளைகளின் பல இனங்களைக் காட்டுகின்ற சொற்கள் நிரம்பிய பாடல் இடம்பெற்ற சங்க இலக்கிய நூல் முல்லைக்கலி.
35. கி.ராஜநாராயணனின் எந்தக் குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்கள் பேசப்படுகின்றன? கிடை.
36. ஒரு பண்பாட்டின் அடையாளமாக விளங்குவது சொல்வளம்.
37. சங்க இலக்கிய மொழியின் அடையாளமாக உள்ள பண்பு தொகைநிலை.
38. தொகைநிலை பற்றிப் பேசும் தொல்காப்பிய இயல் எச்சவியல்.
39. செறிவாக்கப்பட்ட ஒரு வடிவமைப்பு தொகைமொழி.
40. வாக்கிய அமைப்பில் ஒரு சொல் போலவே அமைவது தொகைமொழி.
41. இயல்பு வழக்கில் தொடரமைப்பு என்பது எழுவாய் + செயப்படுபொருள்.
42. வடிவமைப்பின் பகுதிகளையும் முழுமையினையும் சார்ந்து இருப்பது நடையியல்.
43. தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்கு முதன்மை ஆதாரமாகச் செயல்படுவது சங்க இலக்கியம்.
44. தமிழ் அழகியல் என்ற நூலின் ஆசிரியர் தி.சு.நடராசன்.
45. திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் யாரேனும் ஒருவர் தி.சு.நடராசன்.
46. மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர் தி.சு.நடராசன்.
47. போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர் தி.சு.நடராசன்.

## குறுவினாக்கள் (இரண்டு மதிப்பெண் வினாக்கள்)

1. பண்டைக் கவிஞர்களின் அழகியல் உணர்வு பற்றிக் குறிப்பிடுக.

கவிப்பொருளை அமைக்கின்ற விதத்தில், உணர்ச்சியைப் பாய்ச்சுகின்ற விதத்தில் தீங்கவிகளைச் செவியாரப் பருகச் செய்து கற்போர் இதயம் கனியும் வண்ணம் படைக்கும் அழகியல் உணர்வு பண்டைக் கவிஞர்களுக்கு இயல்பானது. இவ்வுணர்வு மலரும் மணமும் போலக் கவிதையுடன் இரண்டறக் கலந்துள்ளது. இவ்விலக்கியங்கள் இழுமெனும் மொழியால் விழுமியது பயக்கும் வகையில் படைக்கப்பட்டுள்ளன.

2. தொல்காப்பியத்தின் சிறப்பு என்ன?

அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருகின்ற தொல்காப்பியம் இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கணம் ஆகும்.

3. தொல்காப்பியம் எவ்வாறு கவிதைக்கலையை முதன்மைப்படுத்துகிறது?

தொல்காப்பியம் இலக்கியத்தையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கணம். எழுத்துக்கள் பற்றிப் பேசும்போதே செய்யுளின் வழக்கைப் பேசுகிறது. எழுத்தையும் சொல்லையும் போன்றே செய்யுளையும் ஓர் உள்ளமைப்பாகத் தொல்காப்பியம் கருதுகிறது.

4. மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?

| | | |
|---|---|---|
| i. உவமம் | ii. உருவகம் | iii. எச்சம் |
| iv. குறிப்பு | v. உள்ளுறை | vi. இறைச்சி |

5. கவிதைத்தனம் அல்லது இலக்கியத்தனம் விளக்கம் தருக.

வரலாற்றுக் காலந்தொட்டு இன்றைய காலம் வரை மனிதர்கள் தங்களுக்குள் இயல்பாகப் பேசிக்கொள்பவற்றை உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி முதலியவை


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

கொண்டு இலக்கியம் தனக்கான ஒரு தன்மையை உருவாக்கிக் கொள்கிறது. இவ்வாறு உருவாவது இலக்கியத்தனம் அல்லது கவிதைத்தனம் எனப்படுகிறது.

6. கலை முழுமை என்று தொல்காப்பியம் எதனைக் கூறுகிறது? *(PTA-3)

இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறவியல் சார்ந்த கருத்துநிலைகள், கலை உருவாக்கத்தின்போதே சரிவர இணைந்திருக்க வேண்டும் என்பதனைச் சுட்டிக் காட்டியுள்ளது. இத்தகையதொரு முழுமைதான் கலை முழுமை எனப்படுகிறது.

7. கவிதையின் நடையியல் கூறுகளில் முக்கியமானவை எவை?

கவிதையின் நடையியல் கூறுகளில், ஒலிக்கோலங்களும் சொற்களின் புலமும் தொடரியல் போக்குகளும் மிக முக்கியமானவை.

8. கவிதையின் உந்துசக்தியாக அமைகின்றவை எவை?

மொழியின் தனிச்சிறப்பான கூறுகளும் அவற்றைக் கையாளுகின்ற வகைமைகளும் கவிதையின் உந்துசக்தியாக அமைகின்றன.

9. தமிழ் அழகியலின் நெடும் பரப்பு எது?

சமூக பண்பாட்டு மரபிற்கேற்பவே, கலைப்படைப்பை அழகியல் நெறியை பண்பாட்டின் இலக்கினையாகச் சித்தரிப்பதற்குத் தமிழ்மரபு முன்வந்திருக்கிறது; முன்மொழிந்திருக்கிறது. இதுவே தமிழ் அழகியலின் நெடும் பரப்பு ஆகும்.

10. நடையியல் விளக்கம் தருக.

ஒலிக்கோலம், சொற்புலம், தொடரியல் போக்கு ஆகியவை இணைந்தது நடையியல் ஆகும். இவை கவிதையின் உந்து சக்தியாக அமைகின்றன. இவையே கவிதையை இயக்குகின்றன என்று தொல்காப்பியமும் பிற இலக்கணங்களும் கருதுகின்றன.

11. ஒலிப்பின்னல் என்றால் என்ன?

தொன்மையான மொழி சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தொடங்குகிறது. மொழி சார்ந்த கவிதையும் இசையோடும் இசைக் கருவியோடும்தான் பிறக்கிறது. ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன. இதனையே ஒலிப்பின்னல் என்கிறோம்.

12. சொல்லில் எவை பொதிந்து கிடப்பது எது?

சொல்லில் உணர்வும் பொருளும், கலையும் பண்பாடும், வரலாறும் அரசியலும் பொதிந்து கிடக்கின்றன.

13. சொற்புலம் என்றால் என்ன?

ஒரு பொருள் குறித்த பல சொற்கள் தனித்தனியாக வருவதையும் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் இணைந்து ஒன்றாகக் கிடப்பதையும் இணைத்து மொழிக்குப் பல சொற்கள் கிடைக்கின்றன. இதுவே சொற்புலம் ஆகும்.

14. தமிழில் சில தொகைமொழிகளைக் குறிப்பிடுக.

வைகுறு விடியல், கன்னி விடியல், புல்லென் மாலை, நள்ளென் யாமம், காமர் வனப்பு, மாண்கவின் காண்டகு வனப்பு, கவினுறு வனப்பு, தீநீர், நெடுநீர், சின்னீர், பனிநீர், ஒலிவெள்ளருவி, பறைக்குரல் எழிலி, பொய்படு சொல், நகைக்கூட்டம், ஓவச்செய்தி ஞ் இப்படி ஓராயிரம்.

15. தொகைமொழி அல்லது தொகைநிலை என்றால் என்ன?

சங்க இலக்கிய மொழியின் அடையாளமாக உள்ள ஒரு பண்பு இது. இதனைத் தொகைநிலை என்று தொல்காப்பிய எச்சவிதி கூறுகிறது. ‘நீர் படுகின்ற அல்லது நீர்பட்ட பசுமையான கலம்’ என்பது, எதுவும் தொகாமல் வருகிற தொடர்மொழி. ‘நீர்படு பசுங்கலம்’ என்று ஆகும் போது

தொகைமொழி என்பது செறிவாக்கப்பட்ட ஒரு வடிவமைப்பு. வாக்கிய அமைப்பில், ஒரு சொல் போலவே நடைபெறும்.

16. மொழியை உழவோடு இணைத்துத் தி.சு. நடராசன் எவற்றைக் கூறுகிறார்?

ஒலிக்கோலமும் சொற்புலமும் சொற்றொடர் நிலையும் பாடலின் தளத்தினை ஏர் நடத்திப் பண்படுத்திப் போகின்றன. பாத்தி கட்டி வரப்புயர்த்தும் பணிகளைத் தொடரியல் வடிவம் செய்கின்றது என்பனவற்றைத் தி.சு. நடராசன் மொழியை உழவோடு இணைத்துக் கூறுகிறார்.

17. தொடரியல் போக்குகள் விளக்குக.

**இடுக வொன்றோ சுடுகவொன்றோ**
**படுவழிப் படுக இப்புகழ் வெய்யோன் தலையே (புறம்.239)**

இவ்வாறு வரும் ஈற்றடி எளிமையான தொடரியல் பிறழ்வோடு அமைந்திருக்கிறது. முதலடியிலிருந்து தொடியுடைய தோள் மணந்தனன் என்று எழுவாய் + செயப்படுபொருள் + பயனிலை என்று வருகிறது. ஆனால் ஈற்றடி மட்டும் மாறி வருகிறது. இவ்வாறு தொடரியல் போக்கு என்பது கருத்து நிலையின் அடிப்படையில் மாறுகிறது.

18. தி.சு. நடராசன் இயற்றிய நூல்களைக் குறிப்பிடுக.

கவிதையெனும் மொழி, திறனாய்வுக்கலை, தமிழ் அழகியல், தமிழின் பண்பாட்டு வெளிகள்.

சிறுவினாக்கள் (நான்கு மதிப்பெண் வினாக்கள்)

1. ஒலிக்கோலம் விளக்கம் தருக.

**கடந்தடு தானை மூவிருங்கூடி**
**உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே (புறம்.10)**

இப்பாடலில் மிகுதியாகப் பயின்று வரும் க, த, ட, ற ஆகியவை ஒலிக்கோலத்திற்கு எடுத்துக்காட்டாகும். மெல்லின எழுத்துக்களைக் காட்டிலும் இவ்வல்லின மெய்களே மிகுதியாக வருகின்றன. மேலும் இதே போன்று

**படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்**
**கடாஅ யானைக் கலிமான் பேக (புறம்.145)**

இப்பாடல்களில் உயிர் ஒலிகள் குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும் சில ஒலிகளும் சில சொற்களும் திரும்ப வரல் தன்மை பெற்றிருப்பதும் இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுக்களும் ஒலிக்கோலங்கள் ஆகும். எந்தத் தொன்மையான மொழியாக இருந்தாலும் இந்த ஒலிக்கோலங்களைப் பற்றியே உருவாகும். இவை சங்கப் பாடல்களில் முக்கியமான ஒரு பண்பாக இருக்கிறது.

2. கவிதை மறுதலைத் தொடரைச் சான்றுடன் விளக்குக. *(PTA-6)

உரைநடை வழக்கு, பேச்சு வழக்கு உள்ளிட்ட இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது, எழுவாய் + செயப்படுபொருள் அல்லது பிறவற்றுடன் கூடிய அமைப்பு + பயனிலை என்று வருவது மரபு. ஆனால் சங்கப் பாடல்கள் பலவற்றில் இது பிறழ்ந்து (மாறி) வருகிறது. இது கவிதை மறுதலைத்தொடர் எனப்படுகிறது.

சான்று: இடுக வொன்றோ, சுடுகவொன்றோ
படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே

இந்த இறுதி அடி ஓர் எளிமையான தொடரியல் பிறழ்வோடு அமைந்திருக்கிறது.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

3. கலை முழுமை என்றால் என்ன?

இலக்கியத்தின் பயன் பற்றித் தமிழ் இலக்கிய மரபில் அழுத்தமான கருத்து உண்டு.

சங்க இலக்கியங்கள் அறத்தினை வலியுறுத்தியே படைக்கப்பட வேண்டும் என்பதே கலை முழுமையாகும்.

கவிஞன் படைக்கும் இலக்கியம் கண்டிப்பாகச் சமுதாயத்தின் பண்பாட்டினை வலியுறுத்தும் விதத்தில் அமைத்து மக்கள் அறநெறியில் நிற்கும் வழியைக் கூறினால் மட்டுமே இலக்கியமாகிய கலை முழுமை அடையும்.

அறம், பொருள், இன்பமாகவோ வேறு ஏதோ ஓர் உயர்ந்த குறிக்கோளாகவோ இந்தப் பயன் இலக்கியத்தில் இடம்பெற வேண்டும்.

தொல்காப்பியம் மிகவும் தெளிவாக இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறிவியல் சார்ந்த கருத்து நிலைகள் கலை உருவாக்கத்தின் போதே சரிவர இணைந்திருக்க வேண்டும். இதுவே கலை முழுமையாகும்.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# இயல் - 1

## செய்யுள் : தன்னேர் இலாத தமிழ்

## தண்டியலங்காரம் - தண்டி

**ஆசிரியரைப் பற்றி :**

பாடப்பகுதி தண்டி எழுதிய தண்டியலங்காரம் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இவர் கி.பி. (பொ.ஆ.) 12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.

**அ) பலவுள் தெரிக. (பாடநூலில் உள்ள ஒரு மதிப்பெண் வினாக்கள்)**

1. "மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
   தன்னேர் இலாத தமிழ்!" இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்

   அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை

   இ) அடிஎதுகை, சீர்மோனை ஈ) சீர்எதுகை, அடிமோனை

**விடை : இ) அடிஎதுகை, சீர்மோனை**

**ஆ) சிறுவினா. (பாடநூலில் உள்ள இரண்டு மதிப்பெண் வினாக்கள்)**

1. 'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக. (PTA-1,3) (MAR '20)

தலைப்பு : தன்னேர் இலாத தமிழ்
(தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்)

இயற்றியவர் : தண்டி

இடம் : இக்கூற்று 'தண்டி'என்பவர் இயற்றிய "தண்டியலங்கார"உரை மேற்கோள் பாடலில் இடம் பெற்றுள்ளது.

பொருள் : கடலால் சூழப்பட்ட உலகத்தின் புறஇருளை அகற்றுவது.

விளக்கம் : மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புறஇருளை அகற்றுகிறது கதிரவன் என்று தண்டி குறிப்பிடுகிறார்.

## மேலும் சில வினாக்கள்

**ஒரு மதிப்பெண் வினாக்கள்**

1. தண்டியலங்காரத்தின் ஆசிரியர் தண்டி.
2. வானம் அளந்தது அனைத்தையும் அளக்கும் வலிமை மிக்கது தமிழ்.
3. நிலத்தினும் பெரிது, வானினும் உயர்ந்தது, கடலினும் ஆழமானது தமிழ்.
4. தண்டியலங்காரம் குறிப்பிடும் மலை பொதிகை மலை.
5. உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றிக் கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது கதிரவன்.
6. பொதிகை மலையில் தோன்றி மக்களின் அறியாமை இருளைப் போக்குவது தமிழ்.
7. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல் ஒன்று தண்டியலங்காரம்.
8. தண்டியலங்காரம் எம்மொழி இலக்கண நூலைத் தழுவி இயற்றப்பட்டது? வடமொழி.
9. தண்டியலங்காரம் எந்த நூலைத் தழுவி இயற்றப்பட்டது? காவியதர்சம்.
10. தண்டியின் காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு.
11. இலக்கண நூலார், உரையாசிரியர் பலரால் எடுத்தாளப்பட்ட பெருமை பெற்ற நூல் தண்டியலங்காரம்.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## குறுவினாக்கள் (இரண்டு மதிப்பெண் வினாக்கள்)

1. உலகத்தின் இருளையும் மக்களின் அறியாமை இருளையும் அகற்றுபவை எவை?

கதிரவன் உலகத்தின் இருளையும் தமிழ்மொழி மக்களின் அறியாமை இருளையும் அகற்றும்.

2. கதிரவனுக்கும் தமிழ்மொழிக்கும் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கூறுக.

இருளை அகற்றுவதில் கதிரவனும் தமிழும் ஒன்றுபட்டாலும் தமிழ்மொழி என்பது தன்னுடைய தன்மையால் தன்னிகர் இல்லாததாகத் திகழ்கிறது.

3. தண்டியலங்காரம் நூற்குறிப்பு எழுதுக. *(HY '19)

தண்டியலங்காரத்தின் ஆசிரியர் தண்டி. அணியிலக்கணத்தைக் கூறும் சிறப்பான நூல்களில் ஒன்று. 'காவியதர்சம்' என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது. பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என்ற மூன்று பெரும் பிரிவுகளையுடையது. இலக்கண நூலார், உரையாசிரியர்கள் எனப் பலரால் எடுத்தாளப்பட்ட பெருமை உடையது.

4. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் எவை?

(i) தண்டியலங்காரம் (ii) மாறனலங்காரம் (iii) குவலயானந்தம்.

5. அணியிலக்கணத்தையும் கூறும் நூல்கள் எவை?

(i) தொல்காப்பியம் (ii) வீரசோழியம் (iii) இலக்கண விளக்கம் (iv) தொன்னூல் விளக்கம் (v) முத்துவீரியம்.

6. தண்டியலங்காரத்தின் இயல்கள் யாவை?

பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல்.

## சிறுவினாக்கள் (நான்கு மதிப்பெண் வினாக்கள்)

1. பொருள் வேற்றுமை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக. **(HY '19) (PTA-6)

**அணி இலக்கணம் :**

**கூற்றினும் குறிப்பினும் ஒப்புடை இருபொருள்**
**வேற்றுமைப் படவரின் வேற்றுமை அதுவே தண்டியலங்காரம் - 47**

செய்யுளில் கவிஞர் இருவேறு பொருள்களுக்கிடையே முதலில் ஒற்றுமையைக் கூறிப் பின் அதிலிருந்து ஒன்றை மட்டும் வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை அணி எனப்படும்.

**சான்று :**

**ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும்...**

எனத் தொடங்கும் பாடல்.

**சான்று விளக்கம் :**

| வெங்கதிர் (கதிரவன்) | பாடல் | தமிழ் |
|---|---|---|
| உதயகிரியில் தோன்றி | ஓங்கல் இடைவந்து | பொதிய மலையில் தோன்றி |
| மக்களால் தொழப்படுதல் | உயர்ந்தோர் தொழவிளங்கி | அறிவுடைய சான்றோரால் தொழப்படுதல் |
| புற இருளை அகற்றுதல் | இருள் அகற்றும் | அறியாமையாகிய மனஇருளை அகற்றுதல் |

**அணிப் பொருத்தம்:**

இப்பாடலில் தமிழ், வெங்கதிர் இரண்டும் தொழிலால் ஒன்றுபட்டும் பொருளால் வேறுபட்டவை என்பதைக் காட்டி இதில் பொருள் வேற்றுமை அணி பயின்று வந்துள்ளது.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# இயல் - 1

## துணைப்பாடம் - தம்பி நெல்லையப்பருக்கு

- பாரதியார்

**ஆசிரியரைப் பற்றி :**

கருக்கிருட்டில், பாழ்கிணற்றில் கால்பதித்த செந்தமிழை உருக்கும் ஒளிமண்டபத்தில் உலவவிட்ட புலவன் பாரதி. நூற்றாண்டின் இணையற்ற கவிஞன். எட்டயபுரத்து இலக்கியச் சூரியன். பாட்டுக் குண்டை நாட்டில் வெடித்து வெள்ளையனை விரட்டியடித்த வீரக்கவிஞன் பாரதி. பாரதியாரைவிட ஏழாண்டுகள் இளையவரான பரலி சு. நெல்லையப்பரைப் பாரதி தன்னுடைய அருமைத்தம்பியாகவே கருதி அன்புகாட்டி வந்தார். பாரதியின் கடிதங்கள் மேலும் அவரை நன்றாகப் புரிந்துகொள்ளத் துணைபுரிகின்றன.

**அ) நெடுவினா. (பாடநூலில் உள்ள ஆறு மதிப்பெண் வினாக்கள்)**

1. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

**குறிப்புச் சட்டகம்**

1. முன்னுரை
2. மொழிப்பற்று
3. மொழியில் புதுமை
4. சமூகப்பற்று
5. சமூகத்தில் புதுமை
6. முடிவுரை

**கதைமாந்தர்கள்**

பாரதியார்
நெல்லையப்பர்

**முன்னுரை**

உறவுக்கு, அறிவுறுத்தலுக்கு, வேண்டுதலுக்கு, வணிகத்திற்கு என்று கடிதங்கள் எழுதுகையில் அவற்றின் மொழியாட்சி மாறுபடுகிறது. கடித வடிவில் சொல்ல வேண்டியவற்றை வெளியிடும் முறை உண்டு. அந்த முறையைச் சரியாகக் கடைப்பிடித்து மொழிப்பற்று, சமூகப் பற்று, நாட்டுப் பற்று ஆகியவற்றைப் பாரதியார் மக்களுக்குத் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்துகிறார்.

**மொழிப்பற்று :**

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்குங் காணோம்"

பாரதியார் 20 ஆம் நூற்றாண்டின் புகழ்மிக்க கவிஞர்களுள் இவரும் ஒருவர். புதுக்கவிதையின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர். தாம் கற்றறிந்த மொழிகளிலேயே ஆகச்சிறந்த மொழி தமிழ்மொழிதான் என்று முழங்கியவர். தமிழ் நாட்டில் வீதிகள் தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் தோன்ற வேண்டும் என ஆசை கொண்டவர். அந்தத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் நவீனக் கலைகளெல்லாம் பயிற்சி பெற்று வளர்க்க வேண்டும்.

**மொழியில் புதுமை :**

தமிழ், தமிழ், தமிழ் என்று தமிழை வளர்ப்பதையே எப்போதும் கடமையாகக் கொள்ள வேண்டும். தமிழில் புதிய செய்தி, புதிய சிந்தனை, புதிய உண்மை, புதிய இன்பம் ஆகியவை மேம்பட வேண்டும்.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

பிறமொழியில் உள்ள இசை, சிற்பம், பூமி நூல்கள், வான நூல்கள் அனைத்துத்துறை சார்ந்த நூல்களும் தமிழில் பெருக வேண்டும்.

**சமூகப் பற்று :**

**"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்"**

நம்மைவிட மெலியவருக்கு நாம் இரக்கப்பட்டு அவர்களை நமக்கு இணையானவராக ஆக்க வேண்டும். அனைத்து துறைகளிலும் உயர வேண்டும். ஆணும் பெண்ணும் சரிநிகர் என்று கொள்ள வேண்டும். பெண்ணைத் தாழ்த்துபவர்கள் தன் கண்ணைத்தானே குத்திக் கொண்டதற்குச் சமம்.

**சமூகத்தில் புதுமை :**

**"எண்ணிய முடிதல் வேண்டும்**
**நல்லவை எண்ணல் வேண்டும்"**

நாட்டில் வியாபாரம் பெருக வேண்டும். தொழிலில் மேம்பட வேண்டும். இயந்திரத்திலும் புதுமை வேண்டும். முயற்சிகள் ஓங்க வேண்டும். இசை, சிற்பம், இயந்திர நூல், பூமி நூல், வானநூல், இயற்கை நூலின் ஆயிரம் கிளைகள் தமிழ் நாட்டிலே மலிந்திட வேண்டும் என்பதையும் வெளிப்படுத்துகிறார்.

**முடிவுரை :**

பாரதியின் கடிதங்களின் வாயிலாகத் தமிழ்மொழியின் மீதும் தமிழ்ச் சமூகத்தின் மீதும் மிகுந்த அக்கறை கொண்டு விளங்கினார் என்பது தெரிய வருகிறது. நாமும் பாரதியின் வழியில் நடப்போமாக.

**தமிழுக்குக் கருவாகி கவிஞராய் உருவாகி**
**தரணிக்கு எருவாகி இக்கால கவிஞர்களுக்கு**
**தக்க வரவாகி நிற்பவரே பாரதியார்**

2. 'சொல்லோவியங்கள்' என்னும் கவிதை நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை எழுதுக.

**நூல் வெளியீட்டு விழா**

நாள் : ஜனவரி 31 நேரம் : முற்பகல் 11.00 மணி

இடம் : பள்ளி வளாகம்

**நிகழ்ச்சி நிரல்**

| | | |
|---|---|---|
| தமிழ்த்தாய் வாழ்த்து | : | மாணவ மாணவியர் |
| வரவேற்புரை | : | திருமதி. நவமணி உதவித் தலைமையாசிரியை |
| தலைமை | : | திரு. ஆ.இராஜேந்திரன் தலைமையாசிரியர் |
| சிறப்பு விருந்தினர் | : | வீர. முருகேசன், சொல்லின் செல்வர் |
| நூலை வெளியிடுபவர் | : | முனைவர் இராஜவினோதா, தமிழ்ப் பேராசிரியர், அரசு மகளிர் கல்லூரி |
| முதல் பிரதியைப் பெறுபவர் | : | சுதாகர், சமூகச் சிந்தனையாளர் |
| நன்றியுரை | : | நூலாசிரியர் |
| நாட்டுப்பண் | : | மாணவ மாணவியர் |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**நன்றியுரை :**

i. அனைவருக்கும் வணக்கம். வரவேற்பதும் நன்றி நவில்வதும் தமிழர் பண்பாடு. அந்த வகையில் நான் எழுதிய சொல்லோவியங்கள் என்னும் கவிதைத் தொகுப்பை வெளியிடுவதற்கு உதவியாக இருந்த என் குடும்பத்தாருக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ii. மேலும் இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற சொல்லின் செல்வர் வீர. முருகேசன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

iii. வீர.முருகேசன் அவர்கள் எம் கவிதை நூலைப் பற்றி விளக்கிய விதம் என்னை இன்னும் பல்வேறு நூல்கள் படைக்கத் தூண்டுகிறது.

iv. இவ்விழாவிற்குத் தலைமை தாங்கியிருக்கும் தலைமையாசிரியர் அவர்களுக்கும் வரவேற்புரை நல்கிய உதவித் தலைமையாசிரியை அவர்களுக்கும் நூலை வெளியிட்ட தமிழ்ப் பேராசிரியர் அவர்களுக்கும் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்ட சமூகச் சிந்தனையாளர் அவர்களுக்கும் என் மனமகிழ்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## மேலும் சில வினாக்கள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. தம்பி நெல்லையப்பருக்கு இக்கடிதத்தினை எழுதியவர் பாரதியார்.
2. நெல்லையப்பர் யாரிடம் காக்க வேண்டும் என்று பாரதியார் வேண்டுகிறார்? பராசக்தி.
3. பாரதி எனதருமைத் தம்பி என்று குறிப்பிடுகிறவர் நெல்லையப்பர்.
4. எட்டயபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றிக் கவிகேசரி சாமி தீட்சிதர் என்பவர் வெளியிட்ட நூல் வம்சமணி தீபிகை.
5. வம்சமணி தீபிகை என்னும் நூலைத் திருத்தி வெளியிட ஆசை கொண்டவர் பாரதியார்.
6. பரலி சு.நெல்லையப்பரின் பன்முகங்கள் விடுதலைப் போராட்ட வீரர், கவிஞர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், இதழாளர், பதிப்பாளர்.
7. சூரியோதயம் இதழில் துணையாசிரியராக விளங்கியவர் பரலி சு.நெல்லையப்பர்.
8. நெல்லைத்தென்றல் என்ற கவிதை நூலை எழுதியவர் பரலி சு.நெல்லையப்பர்.
9. பாரதி கடிதங்கள் என்னும் நூலைப் பதிப்பித்தவர் ரா.அ.பத்மநாபன்.
10. பாரதியார் தம் மறைவிற்கு முன்னர் யாருக்குக் கடிதம் எழுதினார்? குத்திகேசவருக்கு.
11. பாரதியாரைவிடப் பரலி சு.நெல்லையப்பர் எத்தனை ஆண்டுகள் இளையவர்? ஏழு ஆண்டுகள்.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# இயல் - 1

## இலக்கணம் - தமிழாய் எழுதுவோம்

**நுழையும் முன் :**

எழுத்து (2)

- முதலெழுத்து (12+18)
  - உயிரெழுத்து (7+5)
    - குறில் (5)
      அ இ உ எ ஒ
    - நெடில் (7)
      ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ
  - மெய்யெழுத்து (6+6+6)
    - **வல்லினம்** (க ச ட த ப ற)
    - **மெல்லினம்** (ங ஞ ண ந ம ன)
    - **இடையினம்** (ய ர ல வ ழ ள)
- சார்பெழுத்து (10)

**இலக்கணத் தேர்ச்சிகொள் (பாடநூலில் உள்ள வினாக்கள்)**

1. பிழையான தொடரைக் கண்டறிக. *(QY '19) (PTA-2)

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.

ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

**விடை : இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது**

2. பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்

ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.

இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.

ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

**விடை : அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்**

3. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்

i. முடிந்தால் தரலாம் இயன்றதை தரலாம்.

வறுமையில் உள்ளவர்களுக்கு உணவை நம்மால் முடிந்தால் தரலாம்.

ii. முடித்தால் தரலாம் வேலை நிறைவு செய்தால் தரலாம்.

வேலையாட்களின் கூலியை முடித்தால் தரலாம்.

4. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?

எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும். ந, ண, ன/ ல, ள, ழ/ ற, ர ஒலிப்பு வேறுபாடு தெரிந்து ஒலிக்க வேண்டும். தமிழில் இவ்வெழுத்துகள் வரும் முறையையும், அவை

ஏற்படுத்தும் பொருள் மாற்றத்தையும் அறிந்துகொள்வது இன்றியமையாதது. தொடக்கத்தில் சிலகாலம் வாய்விட்டோ அல்லது மனத்துக்குள் உச்சரித்தபடியோ எழுதப் பழகுவது நல்லது. விரைவாக எழுத முயல்வது பிழைக்கு வழிகோலும். கெ, கே, கொ, கோ போன்று கொம்புடைய குறில் நெடில் வேறுபாட்டைப் புரிந்து எழுத வேண்டும்.

## மேலும் சில வினாக்கள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. மிகச் சிறந்த கருவி மொழி.
2. மொழியைத் திறம்படக் கையாண்டால் எதுவாக மிளிரும்? கலையாக
3. தமிழ் என்பதைத் தவறாக ஒலிக்கின்றது எவ்வாறு? தமில்.
4. மழை என்பதை எவ்வாறு தவறாக ஒலிக்கின்றனர்? மலை.
5. வாழைப்பழம் என்பதை எவ்வாறு தவறாக ஒலிக்கின்றனர்? வாலப்பலம், வாயப்பயம்.
6. பாண்டியப் பேரரசன் மீன் பொறித்தான் என்பதை எவ்வாறு தவறாக ஒலிக்கின்றனர்? பாண்டியப் பேரரசன் மீன் பொரித்தான்.
7. தமிழில் சொல் முதலில் வராத எழுத்துக்கள் மெய்யெழுத்துக்கள்.
8. சொல்லின் முடிவில் வராத எழுத்துக்கள் வல்லின எழுத்துக்கள்.
9. சொல்லில் ஈரொற்றாய் வராத மெய்கள் வல்லின எழுத்துக்கள்.
10. சொல்லில் இரட்டையாய் மட்டுமே வரும் வல்லின எழுத்துக்கள் க், ச், த், ப்.
11. சொல்லின் தொடக்கமாக மட்டுமே வரும் எழுத்து நகரம்.
12. சொல்லின் முதலில் வரா எழுத்துக்கள் ட, ற.
13. சொல்லின் இறுதியில் வராத மெய் றகரம்.
14. மெல்லின எழுத்துக்களில் சொல்லின் முதலில் வராத எழுத்துக்கள் ண, ன.
15. சொல்லின் இடையில் மட்டுமே வரும் எழுத்து ஆய்தம்.
16. ரகரம், ழகரத்தை அடுத்து எந்த வரிசை எழுத்துக்கள் வரா? ர, ழ.
17. சொல்லின் அரிதாக வரும் மெய்கள் ஞ், ந், வ்.
18. ணகர ஒற்றினை அடுத்தும் னகர ஒற்றினை அடுத்தும் வராத எழுத்துக்கள் ற, ட.
19. தனிக்குறிலை அடுத்து வராத எழுத்துக்கள் ர், ழ்.
20. உயிர்மெய்க் குறில் எழுத்துக்கள் 90.
21. உயிர்மெய் நெடில் குறில் எழுத்துக்கள் 126.
22. மொழியைச் சரியாக எழுத வேண்டிய முயற்சி நன்றாகப் பேசுதல் வேண்டும்.

### குறு வினாக்கள் (இரண்டு மதிப்பெண் வினாக்கள்)

1. மொழி விளக்கம் தருக.

மொழி மிகச் சிறந்த கருவி. மொழியைத் திறம்படக் கையாண்டால் கலையாக மிளிரும். பிழை மலிய எழுதினால் வெறும் களையாகவே கொள்ளப்படும்.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

2. எழுத்துப்பிழை ஏற்பட முதன்மையான காரணம்?.

பேசுவதைப் போலவே எழுத எண்ணுவதே எழுத்துப் பிழைக்கு முதன்மையான காரணம்.

3. எழுத்து வேறுபட்டால் எவ்வாறு பொருள் மாறும்?

சொத்துத் தகராறு செய்தான் என்பதைச் செத்துத் தகராறு செய்தான் என்று எழுதினால் பொருள் மாறும்.

4. மொழிப்பிழைகளின் வகைகள் யாவை?

எழுத்துப்பிழை, சொற்பொருட்பிழை, சொற்றொடர்ப்பிழை, பொதுவான பிழைகள் சில.

5. எழுதுகிறபோது பிழைகளைத் தவிர்க்க என்ன செய்யலாம்?

சொல் உருவாகும் முறையை அறிந்தும் பொருள் வேறுபாட்டினை உணர்ந்தும் எழுதுகிறபோது பிழைகளைத் தவிர்க்க முடியும்.

6. மயங்கொலி எழுத்துக்கள் எவை?

ண, ந, ன, ல, ழ, ள, ர, ற.

7. அனுப்புநர், ஊரினர் வேறுபாடு தருக.

அனுப்பு + ந் + அர் (இதில் ந் என்பது பெயரிடை நிலை), ஊரி + இன் + அர் (இதில் ன் என்பது சாரியையாக வந்துள்ளது)

8. சொல்லில் ஆய்த எழுத்து எங்கே வரும்?

இடையில் வரும். தனிச்சொல்லாயின் மூவெழுத்தாகவும் தனிக்குறிலை அடுத்தும் வரும்.

9. எவ்வெச்சொற்களின் பொருள் வேறுபாட்டினைக் கற்றுணர்தல் மாணவர்களின் இன்றியமையாத பணியாகும்?

| | | |
|---|---|---|
| i. அறம் அரம் | ii. குறை குரை | iii. வளம் வலம் |
| iv. களம் கலம் | v. மழை மலை | vi. கிளி கிலி |
| vii. ஆணை ஆனை | viii. போனாள் போனால் | ix. என்றாள் என்றால். |

10. லகர ளகர விதிகள் இரண்டினை கூறுக.

i. லகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் லகரம் னகரமாய்த் திரிவதுண்டு.

எ.கா: பல் + முகம் = பன்முகம்

ii. ளகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் ளகரம் டகரமாய்த் திரிவதுண்டு. பல் +

எ.கா: மக்கள் + பேறு = மக்கட்பேறு

11. பிழைகளைத் தவிர்க்க இரண்டு குறிப்புகளை கூறுக.

i. எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும். ந, ண, ன/ல,ள/ழ,ற,ர ஒலிப்பு வேறுபாடு தெரிந்து ஒலிக்க வேண்டும்.

ii. கெ, கே, கொ, கோ போன்று கொம்புடைய குறில் நெடில் வேறுபாட்டினைப் புரிந்து எழுதவேண்டும்.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# இயல் - 1
## மொழியை ஆள்வோம்

**அ) தமிழாக்கம் தருக.**

1. **Learning is a treasure that will follow its owner everywhere.**

கற்றல் என்பது ஒரு புதையல் போலக் கற்பவரை அது தொடர்ந்து செல்லும்.

2. **A new language is a new life.**

புதுமொழி என்பது புது வாழ்க்கைகையைப் போன்றது.

3. **If you want people to understand you, speak thaie language.**

மக்கள் உன்னைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் நீ அவர்கள் மொழியில் பேச வேண்டும்.

4. **Knowledge of languages is the doorway to wisdom.**

பன்மொழி அறிவு என்பது ஞானவீட்டின் வாயில் ஆகும்.

5. **The limits of my language are the limits of my world.**

என்னுடைய மொழியின் வரம்பு என்பது எனது உலகின் வரையறையைப் போன்றது.

**இலக்கிய நயம் பாராட்டுக.**

**(PTA-5,6)

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி! - கண்ணதாசன்

**குறிப்புச் சட்டகம்**

1. முன்னுரை
2. திரண்ட கருத்து
3. மையக் கருத்து
4. தொடை நயம்
   அ) மோனை
   ஆ) எதுகை
   இ) இயைபு
5. முடிவுரை

**முன்னுரை :**

கண்ணதாசன் தமிழன்னையாகிய பெருமாட்டி பற்றி அழகாக எடுத்துரைத்த கவிதை இக்கவிதை. அவர் பெருமாட்டியை எவ்வாறெல்லாம் அன்றைய காலந்தொட்டு இன்றைய காலம் வரை மக்கள் வளர்த்தனர் என்பதை அழகாக எடுத்துக்காட்டியுள்ளார் . அவற்றைக் கீழே காண்போம்.

**திரண்ட கருத்து :**

முச்சங்கங் கூட்டி முதுபுலவர் தமைக் கூட்டி அச்சங்கத் துள்ளே அளப்பரிய பொருள்கூட்டி சொற்சங்க மாகச் சுவைமிகுந்த கவிகூட்டி அற்புதங்க ளெல்லாம் அமைத்த பெருமாட்டி! என்று கவிஞர் கண்ணதாசன் கூறியுள்ளார்.

**மையக் கருத்து :**

தமிழன்னை எவ்வாறு புலவர்களை வைத்து வேலை வாங்கித் தமிழை வளர்த்தாள் என்று கூறியுள்ளார்.

**தொடை நயம்:**

எழுத்துக்களை ஒன்றோடொன்று தொடுப்பது தொடைநயம் என்பர். அவற்றில் சிலவற்றைக் காணலாம்.

**மோனை:**

ஒரு செய்யுளில் அடிகளிலோ சீர்களிலோ முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை.

முச்சங்கம் - முதுபுலவர்

அச்சங்கத் - அளப்பரிய

**எதுகை:**

ஒரு செய்யுளில் அடிகளிலோ சீர்களிலோ இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை.

முச்சங்கம் - அச்சங்கத்

சொற்கங்கத் - அற்புதங்கள்

**இயைபு:**

ஒரு செய்யுளில் கடைசி எழுத்தோ அல்லது சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபு.

புலவர்தமைக்கூட்டி - பொருள் கூட்டி

கவிகூட்டி - பெருமாட்டி

**முடிவுரை :**

தமிழ்க் கவிஞர்கள் அருமைமிகு உணர்வுகளைச் சுவைமிகு கவிதையாகப் படைத்தளித்தமையால்தான் இன்றளவும் தமிழ் கன்னித்தமிழாகத் திகழ்கிறது.

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக.**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மன வளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சிபெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும்

உள்ளனர். மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே. மொழியால் வளர்பவரும் மக்களே.

**- மொழி வரலாறு (மு.வரதராசனார்)**

**வினாக்கள் :**

1. மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை எது?
2. மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் கருவி எது?
3. பெற்ற தாயின் முதல் வேட்கை எது?
4. பெற்ற தாய் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி எது?
5. குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது எது?

**உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

1. **தாமரை இலை நீர்போல**

   எவரிடமும் தாமரை நீர்போல ஒட்டாமலேயே பழகுதல் நல்லது.

2. **கிணற்றுத்தவளை போல**

   சமுதாயத்தில் சிலர் தங்கள் வேலைகளை மட்டுமே பார்த்துக்கொண்டு கிணற்றுத் தவளை போல வாழ்ந்து வருகின்றனர்.

3. **எலியும் பூனையும் போல**

   அண்ணனும் தம்பியும் எலியும் பூனை போல இருப்பார்கள்.

4. **அச்சாணி இல்லாத தேர்போல**

   வழிநடத்தும் தலைவன் இல்லாத படையின் வெற்றி அச்சாணி இல்லாத தேர் போன்றதே..

5. **உள்ளங்கை நெல்லிக்கனிபோல.**

   கடின உழைப்பாளிக்கு உரிய மதிப்பு கிடைப்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல.

**ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.**

**தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்புகள்.**

எண்ணத்தை வெளியிடுவதற்கும் சிந்தனையாற்றல் பெருகுவதற்கும் தாய் மொழியே துணைநிற்கும் இதனை வலியுறுத்திப் பின்வரும் குறிப்புக்களைக் கொண்டு கட்டுரை எழுதுக.

தாய்மொழிக் கல்வியின் தேவை - தாய்மொழிச் சிந்தனை - அறிஞர்களின் பார்வை - கற்கும் திறன் - பயன் - இன்றையநிலை

**தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்புக்கள்**

**முன்னுரை:**

தாய்மொழி என்பது குழந்தை தாயின் கருவறையில் உருவானபோதே தாய் தந்தை உறவினர் சமுதாயம் பேச்சைக் கேட்டு வளர்வது. அப்படி வளரும் குழந்தை சமுதாயத்தில் நிகழும் பல்வேறு நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு மேலும் மேலும் அறிவு பெறுகிறது. தாய்தான் குழந்தைக்கு முதன்மையான அறிவின் பிறப்பிடம். அத்தகைய தாயினால் பெற்ற மொழி பெற்ற தாய்மொழி பற்றிக் காண்போம்.

**குழந்தையின் அறிவு:**

குழந்தைக்கு அறிவு எங்கிருந்து கிடைக்கிறது எனில் முதன்முதலில் தாயிடமிருந்தே கிடைக்கிறது. அவள்தான் குழந்தையைத் தன் வயிற்றில் தாங்கி வளர்க்கிறாள். அதன் மூலம்

குழந்தையின் அறிவு பெருகுகிறது. குழந்தை எப்போதும் தாயின் அரவணைப்பிலேயே அதிகம் இருக்கிறது. எனவே தாயின் அறிவே குழந்தையிடம் அதிகம் இருக்கும். எனவே குழந்தை தாயிடமிருந்து கற்பவையே நிறைய இருக்கும்.

**குழந்தையின் கல்வி மொழி:**

ஒரு தாய் எந்த மொழியில் பேசுகின்றாளோ அந்த மொழியே அக்குழந்தை பயிலும் இடத்திலும் இருந்தால் தாயிடமிருந்து பெற்ற மொழியறிவைக் கொண்டு மேலும் மேலும் கல்விக்கூடங்களில் கிடைக்கும் அறிவையும் மெருகூட்டி அக்குழந்தை நன்கு அறிவு வளர்ச்சி பெறும். எனவே குழந்தை தாயிடமிருந்து பெற்ற அறிவை வளர்ப்பதற்குக் கண்டிப்பாகக் குழந்தையின் தாயின் மொழியிலேயே கற்பிக்க வேண்டும்.

**எழுத்தறிவு:**

குழந்தைக்கு எழுத்தறிவு கொடுப்பதுதான் குழந்தை தாயிடமிருந்து கற்ற அனுபவ அறிவிற்குப் பின் சமுதாயத்தில் முக்கியமான தேவையாகும். ஏனெனில் மனிதன் ஆண்டாண்டுக் காலமாகக் பேசிக் கற்ற மொழி அதன் இன்னொரு வகையான வடிவமாக அதனைக் குறியீடாகக் கொண்ட நிலை எழுத்து ஆகும். எழுத்து மிகத் தேவையானது. பல்வேறு நிலைகளில் மனிதர்களுக்கு எழுத்தறிவு உதவுகிறது. தன் குறிப்பைப் பிறருக்கு உதவுவதற்கு எழுத்து உதவுகிறது.

**கற்றல்:**

குழந்தை தாயிடமிருந்து முதன்முதலில் என்ன கற்றதோ அதுவே பழங்காலம் வரை நீடித்து இருக்கும். அதனை மெருகூட்ட என்ன செய்ய முடியுமோ அத்தனையையும் இந்தச் சமுதாயம் செய்ய வேண்டும். அதற்கு இந்தக் கல்வி நிலையங்கள் உதவ வேண்டும். கற்றல் என்பது செயல்வழிக் கற்றல் முறையாக இருந்தால் மிகவும் நன்றாக இருக்கும். செயல்வழிக் கற்றல் என்பது குழந்தைகளின் குழந்தைத் தன்மையை மேலும் மெருகூட்டும்.

**கற்றல் விளைவு:**

சமுதாயத்தில் தாய்மொழி வழியாகக் கல்வி கற்கும் குழந்தையே என்றும் தன்னுடைய உண்மையான அறிவைப் பெற்றுத் திகழும். தான் யார் என்பதும் தான் எதற்காக வாழ்கிறோம் என்பதும் அறிந்தும் வாழும். தாய்மொழிக் கல்வி கொண்ட குழந்தை இச்சமுதாயத்தில் சிறந்த குடிமகனாக வாழும் என்பது திண்ணம்.

**முடிவுரை:**

எனவே தாய்மொழிக் கல்வியையே பயில்வோம். தமிழால் இணைவோம்.

தாய்மொழியைப் புறக்கணித்து வாழ்ந்த நாடும் இல்லை

தாய்மொழியைப் பாராட்டி வீழ்ந்த நாடும் இல்லை

மொழியோடு விளையாடு

**எண்ணங்களை எழுத்தாக்குக.**

பண்டைக்காலத்தில் வாழ்ந்த மனிதன் தான் கல்லால் செய்த கருவியைக் கொண்டு அதே கல்லையே செதுக்கினான். சிறிய கல்லைக் கொண்டு பெரிய கல்லை உடைக்க ஆர்வத்தோடு முயல்கிறான். ஒரு கல்லை உடைக்க இருகல்.

**குறிப்புக்களில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்.**

கவிஞர் - ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம். - கவிமணி.

தமிழறிஞர் - முதலிரு எழுத்துக்களால் மறைக்கலாம். - மறைமலையடிகள்

தாய்மொழி - ஈற்றிரு எழுத்துக்கள் வெளிச்சம் தரும் - தமிழ் ஒளி


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

சிறுகதை ஆசிரியர் - முதல் பாதி நவீனம் - புதுமைப்பித்தன்.

முன்னெழுத்து அரசன் பின்னெழுத்து தமிழ் மாதம். - கோதை.

**அந்தாதித் தொடரில் கவித்துவமாக்குக.**

குழந்தையைக் கொஞ்சும் தாயின் குரல்
தாயின் குரலில் உயிரின் ஒலி
உயிரின் ஒலி தாயின் மொழி
தாயின் மொழியே தமிழ்மொழி

**நிற்க அதற்குத் தக**

**கீழ்க்காணும் செயல்பாடுகளைச் சரி/தவறு எனப் பிரித்துச் சரியெனில் காரணமும் தவறு எனில் மாற்றுவதற்குரிய செயலையும் குறிப்பிடுக.**

| செயல்பாடு | சரி காரணம் | தவறு மாற்றம் |
|---|---|---|
| எடு பொருள்களை எடுத்த இடத்தில் வைத்தல் | சரி. பொருள்களைத் தேடாது எடுக்க முடியும்/ நேரம் வீணாதல் தவிர்க்கப்படும். | |
| பொதுவிடத்தில் எச்சில் துப்புதல் | | தவிர்ப்பது நல்லது. |
| வகுப்பில் காகிதங்களைக் கிழித்துப் போடுதல் | | காகிதங்களைச் சேகரித்து வைத்துக்கொண்டு தேவையான செயல்களைச் செய்ய வேண்டும். |
| இருக்கை, மேசைகளில் கிறுக்குதல் | | ஓவியம் வரையலாம். |

# பொதுத்தமிழ்

**வகுப்பு : XII** **மொத்த மதிப்பெண் : 25**

**நாள் :** **நேரம் :**

**குறிப்பு: விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.**

பகுதி - I

**அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

**ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** 5x1=5

1. “மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு” கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது ங) வள்ளல்களைத் தந்தது

உ) பொதிகையில் தோன்றியது

அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி

இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

2. செம்பரிதி செம்மை + பரிதி

அ) முன்நின்ற மெய் திரிதல் ஆ) ஆதி நீடல்

இ) இனம் மிகல் ஈ) ஈறு போதல்

3. தமிழ்க்குயில் எவ்வாறு வர வேண்டும்?

அ) பாடி ஆ) சீறி இ) கூவ ஈ) ஆடி

4. கருத்து 1 : இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.
கருத்து 2 : தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி

இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

5. “மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!” இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்

அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை

இ) அடிஎதுகை, சீர்மோனை ஈ) சீர்எதுகை, அடிமோனை

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்**

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 3x2=6

6. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
7. கலை முழுமை என்பதை விளக்குக.
8. ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும் இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

## பகுதி - III

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்**

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 2x4=8

9. ‘செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்’ தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.
10. சங்கப் பாடல்களில் உள்ள ஒலிக்கோலம் குறித்து விளக்கி எழுதுக.

## பகுதி - IV

**இரு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்** 1x6=6

11. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com